**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.**

**OS 58/2022**

**24.03.2026.**

**DW - 1**

**பி.வா.சா.1.கண்ணன், த/பெ. அருணாச்சலம் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

பி.வா.சா.ஆ.5 ஆவணமானது தொடர் உண்ணாவிரதம் இருப்பதற்காக கொடுக்கப்பட்ட துண்டு அறிவிப்பு என்றால் - சரிதான். நான் மீடியாவிலும், பத்திரிக்கையிலும் வாதிதான் எனது பணத்தை மோசடி செய்திருப்பார் என்று அறிவிப்பு கொடுத்துள்ளார் என்றால் - சரிதான். அவர் மோசடி செய்ததால் கொடுத்தேன். அதிலுள்ள அனைத்து தொகைளையும் வாதிதான் எனது கையெழுத்து போட்டு எடுத்தார். எந்த வங்கியிலிருந்து தொகையை எடுத்தார் என்றால் - தஞ்சாவூர், மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து எடுத்தார். அதுதான் எனது குற்றச்சாட்டு என்றால் - சரிதான். தஞ்சாவூர், மத்திய கூட்டுறவு வங்கி வாதி வேலை செய்த அலுவலகத்திற்கு கீழ் வராது என்றால் - சரிதான். வாதி வேலை செய்யும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்கு மேலதிகாரிகள் தான் தஞ்சாவூர், மத்திய கூட்டுறவு வங்கி என்றால் - சரிதான். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளரும் தஞ்சாவூர், மத்திய கூட்டுறவு வங்கி செயலாளரும் சேர்ந்துதான் என் பணத்தை மோசடி செய்திருக்கிறார்கள். அவ்வாறு இருவரும் சேர்ந்துதான் எனது பணத்தை மோசடி செய்ததாக முதல் தகவல் அறிக்கையில் இல்லை என்றால் - சரிதான். நான், முழு தொகையையும் நானே எடுத்துக்கொண்டு வாதியை மிரட்டி துர்லாபம் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் வாதியின் மீது அவதூறு பரப்பி வருகிறேன் என்றால் - சரியல்ல. உண்ணாவிரத போராட்டம் எந்த ஊரில் நடத்தினேன் என்றால் - துண்டு அறிக்கை கொடுத்ததோடு சரி உண்ணாவிரதம் இருக்கவில்லை. எந்த எந்த தொலைக்காட்சிகள் வந்தது என்று தெரியாது. எத்தனை தொலைக்காட்சிகள் வந்தது என்றால் - எத்தனை தொலைக்காட்சிகள் பேட்டி எடுத்தது என்று தெரியாது. அன்றைய காலக்கட்டத்தில் தலைப்புச்செய்தியாக அந்த செய்தி தான் வந்தது என்றால் - சரிதான். வைப்புத்தொகையை நானே எடுத்துக்கொண்டு வாதியின் மீது அவதூறு பரப்புவது தவறு என்றால் - சரியல்ல. என்னிடம் காட்டப்படும் போட்டோவில், 8 தொலைக்காட்சிகள் காணப்படுகின்றன என்றால் - சரிதான். வாதிக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி அவதூறு பரப்பிய அளவில் நான்தான் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்றால் - சரியல்ல. மொத்தமாக வாதி எவ்வளவு மோசடி செய்தார் என்றால் - ரூ.27.5 இலட்சம் மோசடி செய்துள்ளார். பி.வா.ஆ.2 ஆவணமான எனது பதில் அறிவிப்பில், என்னை ஏமாற்றி அபகரித்த ரூ.7,50,986/- என்று காணப்பட்டுள்ளது என்றால் - சரிதான். ஏமாற்றிய தொகையை என்னிடம் கொடுக்கவேண்டும் என்று தான் சொல்கிறேன். எனது நோக்கம் பணம் பறிப்பது என்பதுதான் என்றாலும் அதற்கு வாதி உடன்படவில்லை என்பதால் அவர்மீது அவதூறு பரப்பி வருகிறேன் என்றால் - சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி
மன்னார்குடி.